தமிழ்நாடு மார்க்கட்டிங் கமிட்டி ஊழியர்களின் கோரிக்கைகள்.

*வினா எண் 146—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மார்க்கட்டிங் கமிட்டி ஊழியர்கள் பல வேறு கோரிக்கைகளை வற்புறுத்தி திருச்சி, வேலூர் போன்ற இடங்களில் ஊர்வலம் நடத்தி அரசுக்குக் கோரிக்கையை அனுப்பி வைத்துள்ளனரா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) அரசுக்கு நேரடியாக மனு கொடுக்கப்படவில்லை ஆனால், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவர்களிடம் மனுக்கள் கொடுக்கப்பட்டன.

(ஆ) மற்றும் (இ) இவ் வினாக்களுக்கு இடமில்லை.

(முற்பகல் 9-20)

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலே மனு கொடுத்திருந்தாலும், அவர்கள் அதை அரசுக்கு அனுப்பி வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அதிலே அவர்கள் என்னென்ன குறையினைக் கூட்டி இருக்கிறார்கள். அரசாங்கம் அதில் ஏதாவது செய்திருக்கின்றதா ? செய்ய யோசித்திருக்கின்றதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, திருச்சி விற்பனைக் குழு ஊழியர்கள் 17 கோரிக்கைகளையும், கோயம்புத்தூர் விற்பனைக் குழு ஊழியர்கள் ஏறத்தாழ 22 கோரிக்கைகளையும் தந்திருக்கிறார்கள். அது அரசுக்கு வந்திருக்கின்றது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அது பற்றிய விவரங்களைத் தனியாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமானால் தெரிவிக்கலாம்.

திரு. ப. சுந்தரம் : தலைவரவர்களே, பல்வேறு மாவட்டங்களில் இருந்து கோரிக்கை வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள விற்பனைக் குழுவின் ஊழியர்களும் கோரிக்கைகள் அனுப்பி இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. அது அரசுக்குக் கிடைத்திருக்கிறதா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

1981 செப்டம்பர் 1]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் அரசாங்கத்திலே உள்ள வேளாண்மைத் துறை அதிகாரிகளால் ஒடுக்கப்படுவதாக ஒரு எண்ணம் பரவலாக இருக்கின்றது. அதை அமைச்சர் அவர்கள் அறிந்திருப்பார்கள் என்று நம்புகிறேன். ஆகவே இந்த அலுவலர்களையும் அரசாங்க அலுவலர்களாக எடுத்துக் கொள்கின்ற திட்டம் அரசுக்கு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்குகின்ற எண்ணம் இருக்கின்றது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதிகாரிகள் ஒடுக்குவதாகச் சொன்னார்கள். மக்களாட்சி நடக்கின்ற நாட்டிலே யாரும் யாரையும் ஒடுக்க முடியாது.

திரு. ஏ. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, இந்த ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் பணியாற்றுகின்ற கண்காணிப்பாளர் போன்ற பணிகளை எல்லாம் வேளாண்மைப் பட்டம் படித்த அதாவது பி.எஸ்.ஸி. அக்ரி. படித்தவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டும் என்பது பற்றி பரிசீலனையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அது உண்மையா? தற்போது பணியாற்றுகின்ற அனுபவம் மிக்க கண்காணிப்பாளர்களே தொடர்ந்து கண்காணிப்பாளர்களாகப் பணியாற்றுவதற்கு அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ள முறையினை இப்போது மாற்றும் உத்தேசம் இல்லை.

குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணை

*வினா எண் 147—திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் கரும்பு ஆராய்ச்சிப் பண்ணையை நவீன முறையில் விஸ்தரிக்க அரசு ஆலோசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.